இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 04-03-2025

# தேசப்பற்றைப் பற்றி யார் பேசுவது?

**த**மிழ்நாட்டுக்கு வந்து உரையாற்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள், தி.மு.க.வை தேச விரோதக் கட்சி என்று சொல்லி இருக்கிறார். ஒரு நாட்டின் உள்துறை அமைச்சர் பேசும் பேச்சா இது? பொறுப்பு வாய்ந்த உள்துறை அமைச்சர் பதவியில் இருக்கும் அவர், இப்படி வாய்க்கு வந்ததைப் பேசலாமா? வாய் துடுக்குடன் பேசலாமா?

இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளான நேதாஜி சுபாஸ் சந்திர போஸையும், மாவீரன் பகத்சிங்கையும் கொண்டாடுவதன் மூலமாக தங்களை தேச பக்தர்களாகக் காட்டிக் கொள்ள நினைக்கிறது பா.ஜ.க. இது அந்தக் கட்சியின் வரலாற்றுத் தந்திரம் என்றே ஸோயா ஹசன் என்கிற வரலாற்றுப் பேராசிரியை, **"பா.ஜ.க.வின் சித்தாந்த மூதாதையர்கள் சுதந்திரப் போராட்டத்தில் எந்தப் பங்கையும் வகிக்கவில்லை"** என்று எழுதினார்.

இந்தியாவின் புகழ்பெற்ற வழக்கறிஞரான ஏ.ஜி.நூரணி அவர்கள், 2002 ஆம் ஆண்டு சாவர்க்கர் குறித்து ஒரு புத்தகம் எழுதினார். **'சாவர்க்கரும் இந்துத்துவமும் - மகாத்மா காந்தி படுகொலையும்'** என்ற தலைப்பில் அது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகி உள்ளது. ஆவணக் காப்பகத்தின் பல்வேறு தகவல்களைத் திரட்டி எழுதப்பட்ட வரலாற்று ஆய்வு நூலாகும் அது. **பல முறை ஆங்கில அரசிடம் மன்னிப்புக் கேட்டவர் சாவர்க்கர்** என்பதை ஆதாரங்களுடன் அந்த நூலில் ஏ.ஜி. நூரணி சொல்லி இருக்கிறார்.

1883 முதல் 1966 வரை வாழ்ந்தவர் சாவர்க்கர். அபிநவ் பாரத் என்ற அமைப்பில் இயங்கியவர். சட்டம் படிக்க லண்டன் சென்றவர். அந்தக் காலக்கட்டத்தில் இந்தியாவிலும் இலண்டனிலும் இயங்கிய இந்திய தேசியக் குழுக்களுடன் தொடர்பில் இருந்தவர். வில்லியம் கர்சான் கொலை, நாசிக் மாவட்ட நீதிபதி ஜான்சன் கொலை ஆகிய இரண்டிலும் தொடர்புடையவராக சாவர்க்கர் சந்தேகப்படுத்தப்படுகிறார். இந்தியாவிலும் இலண்டனிலும் மன்னராட்சிக்கு எதிராகப் பேசியதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படுகிறார். கைது செய்யப்பட்ட இவர், மார்செல்ஸ் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு இருந்த மோரியா கப்பலில் இருந்து தப்பினார். பின்னர் பிரான்சில் பிடிபட்டார்.

1910 ஜூலை 22 அன்று மும்பைக்கு அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். டிசம்பர் 10 வழங்கப்பட்ட தீர்ப்பின் படி ஆயுள் காலம் முழுவதும் நாடு கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு தரப்படுகிறது. அதன்படி அந்தமான் சிறையில் அடைக்கப்படுகிறார். 1911-ல் ஆங்கில அரசுக்கு அவர் ஒரு கருணை மனு அனுப்புகிறார். அதன்மீது நடவடிக்கை இல்லை என்றதும் 1913 நவம்பர் 14 அன்று மீண்டும் கருணை மனு போடுகிறார். அந்த வாசகங்களை வழக்கறிஞர் ஏ.ஜி.நூரணி தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**"அரசு தன் நல்லதிகாரத்தைப் பயன்படுத்தி என்னை விடுவித்தால் அரசியலமைப்பின் செயல்பாட்டிற்காக வாதாடுவதுடன் ஆங்கில அரசுக்கு விசுவாசமாகவும் நடந்து கொள்வேன். அரசு எந்த வகையில் விரும்புகிறதோ அந்த வகையில் சேவகம் புரியத் தயாராக உள்ளேன். எனது மாற்றம் மனச்சாட்சியின் குரலுக்கேற்ப ஏற்பட்டுள்ளதால் எனது எதிர்கால நடத்தை அதற்கேற்பத்தான் இருக்கும். என்னைச் சிறையில் வைத்திருப்பதன் மூலம் எதுவும் பெற இயலாது. மாறாக அவ்வாறு இல்லாதிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். தந்தை போன்ற அரசின் வாசலுக்குக் கெட்டழிந்த மகன் திரும்ப வருமாறு கருணை செய்ய வல்லமை மிக்க தங்களால் மட்டுமே முடியும்"** - என்று சாவர்க்கர் எழுதி இருக்கிறார். மன்னிப்பு, கருணை மனுவை விட மிக மோசமான வார்த்தைகள் இவை என்கிறார் வழக்கறிஞர் ஏ.ஜி.நூரணி.

1924 எரவாடா சிறையில் இருந்து நிபந்தனைகள் அடிப்படையில் விடுதலை செய்யப்படுகிறார் சாவர்க்கர். அடுத்த ஆண்டு ஒரு கட்டுரை எழுதியதற்காக மீண்டும் அவர் மீது வழக்கு பாய்கிறது. அதற்கு அனுப்பிய பதிலில் **சுயராஜ்யம் என்ற சொல்லில் தனக்கு நம்பிக்கை இல்லை** என்று பதில் அனுப்பி இருக்கிறார் சாவர்க்கர். அவருக்கு மீண்டும் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது. 1937 ஆம் ஆண்டுதான் முழுமையாக விடுவிக்கப்படுகிறார். இவை அனைத்தையும் வரிசைப்படுத்தி இருக்கிறார் ஏ.ஜி.நூரணி.

**"சாவர்க்கரின் கஷ்டங்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. அதேபோல், அவரது சரணாகதியையும் சமரசப் போக்கையும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. அவரை வீரராகப் புகழ்பவர்கள், அவரது முதல் பகுதியை மட்டும் மிகைப்படுத்திக் கூறிவிட்டு பிற்பகுதியைப் பற்றி அவர்களால் மறுக்க முடியாவிட்டாலும் கண்டுகொள்வதில்லை"** என்று 2002 இல் எழுதினார் ஏ.ஜி.நூரணி. இத்தகைய பரம்பரையைச் சேர்ந்தவர்தான் அமித்ஷா. இன்றைக்கு மற்றவர்களுக்கு **தேசபக்திப் பாடம்** எடுக்கிறார்.

பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது மட்டுமே தேசப்பற்று ஆகாது என்றும், தேசியவாதம் ஆகாது என்றும் சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் கோல்வார்க்கர். ஒத்துழையாமை இயக்கத்தையும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தையும் **'சட்டத்தை மதிக்க வேண்டியது இல்லை என்ற நினைப்பை உருவாக்கிய இயக்கம்'** என்று சொன்னவரும் அவர் தான். 'தியாகிகளை மதிக்கத் தேவையில்லை' என்று எழுதியவரும் அவர் தான்.

'உள்நாட்டில் சீர்குலைவை ஏற்படுத்த அல்லது பாதுகாப்பின்மையை உருவாக்க யாராவது வெகுமக்கள் உணர்வைக் கிளப்பிவிட்டால் அதை எந்த அரசாங்கமாக இருந்தாலும் தடுத்து நிறுத்தியாக வேண்டும்' என்று சொன்னவர் சியாம் பிரசாத் முகர்ஜி என்ற ஜனசங்கத் தலைவர். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது தான் அப்படிச் சொன்னார்.

அண்ணல் காந்தி கொலைச் சதி குறித்து சியாம் பிரசாத் முகர்ஜிக்கு அன்றைய உள்துறை அமைச்சர் படேல் எழுதிய கடிதத்தில், **"காந்தியைக் கொலை செய்ய சதி செய்ததில் மகாசபாவின் தீவிரவாதப் பிரிவு ஈடுபட்டிருக்கிறது என்பதில் என் மனதுக்கு எட்டியவரை எந்த சந்தேகமும் இல்லை. காலங்கள் கடந்து போகப் போக ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் இன்னும் அதிகரித்த அளவில் கட்டுப்பாடுகளை மீறுவதும் அதுபோல சீர்குலைவு நடவடிக்கைகளை அதிகப்படுத்துவதையும் நடத்தி வருகிறது"** என்று குற்றம் சாட்டினார். இப்படிச் சொன்னவர் படேல். அவருக்குத் தான் ரூ.3000 கோடியில் சிலை வைத்துள்ளது பா.ஜ.க.

எனவே **தேசம், தேசபக்தி, தேசத்துரோகம் என்ற சொற்களைப் பயன்படுத்தும் போது பா.ஜ.க.வினர் பக்கம் பார்த்து பயன்படுத்தவும்.**

## இசைஞானி இளையராஜாவின் கணக்கற்ற சாதனைகளில்

# இலண்டன் மாநகர சிம்பொனி அரங்கேற்ற சாதனை - ஒரு மணிமகுடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, மார்ச் 4 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் உள்ள இசைஞானி இளையராஜா அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் நேரில் சென்று, இங்கிலாந்து நாட்டின் இலண்டன் நகரில் 8.3.2025 அன்று இசைஞானி இளையராஜா அவர்கள் முதல் நேரடி சிம்பொனி இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளதை யொட்டி (Symphony Live Performance), அவருக்கு நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தது தொடர்பாக சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**ஆசியாவிலேயே யாரும் செய்யாத சாதனையாக, வரும் மார்ச் 8 அன்று இலண்டன் மாநகரில் சிம்பொனி அரங்கேற்றத்தை நிகழ்த்தவுள்ளார் நம் மனதிற்கினிய ராஜா அவர்கள். தமிழ்நாட்டின் பெருமிதமான இசைஞானியின் இச்சாதனை முயற்சியை வாழ்த்துவதற்காக இன்று நேரில் சென்றேன்.**

**அப்போது, தாம் கைப்பட எழுதிய** Valiant symphony **இசைக் குறிப்புகளை உற்சாகத்துடன் என்னிடம் காட்டி மகிழ்ந்தார்.**

**உலகத் தமிழர்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த இசை மூச்சான இளையராஜா அவர்களின் கணக்கற்ற சாதனைகளில் இந்தச் சாதனை ஒரு மணிமகுடமெனத் திகழ வாழ்த்துகிறேன்!**

இவ்வாறு முதல்வர் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.20259) சென்னையில் உள்ள இசைஞானி இளையராஜா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, இங்கிலாந்து நாட்டின் இலண்டன் நகரில் 8.3.2025 அன்று இசைஞானி இளையராஜா அவர்கள் முதல் நேரடி சிம்பொனி இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளதையொட்டி (Symphony Live Performance), அவருக்கு நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

## 2024 – 2025 கல்வியாண்டின் 11 – 12 ஆம் வகுப்பு தேர்வு தொடக்கம்!

# உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர் கொள்ளுங்கள்!

## தேர்வு எழுதும் மாணவர்களுக்கு முதல்வர் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, மார்ச் 4 - 2024-25ஆம் கல்வியாண்டிற்கான 11 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வெழுதவுள்ள மாணவச் செல்வங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

தமிழ்நாட்டின் 12 ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவச்செல்வங்களுக்கான பொதுத் தேர்வுகள் முறையே 03.03.2025 மற்றும் 05.03.2025 அன்றும் தொடங்க இருக்கின்றன. 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,21,057 மாணவ, மாணவியர்களும், 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 8,23,261 மாணவ, மாணவியர்களும் தேர்வெழுதவுள்ளனர்.

கடந்த ஓராண்டுகாலமாக மாணவச்செல்வங்களாகிய உங்களுக்கு உங்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள் உங்களது கல்விக்கு மிகுந்த உறுதுணையாகவும், தூண்டுகோலாகவும் இருந்து வழி நடத்தியிருப்பார்கள். அவர்களது அரவணைப்பில் நீங்கள் பொதுத் தேர்வினை எதிர்கொள்ள ஆயத்தமாக இருப்பீர்கள். இப்பொதுத் தேர்வுகள் உங்களது உயர்க்கல்விக்கும், வாழ்க்கைக்கும் மிக முக்கியமான அடித்தளமாகும். நீங்கள் தேர்வினை மன அமைதியுடன், தன்னம்பிக்கையுடன் எழுத வேண்டும்.

நீங்கள் இதுவரை செய்த முயற்சிகள், உங்கள் தேர்வில் நல்ல முடிவுகளைத் தரும். உங்களின் உழைப்பில் முழு நம்பிக்கையும் எனக்குள்ளது.

பதற்றமின்றி, உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர்கொள்ளுங்கள். உங்கள் உடல்நலம், தூக்கம், உணவு மற்றும் மன நிலையை கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்களது உயர்கல்விக்காக புதுமைப்பெண், நான் முதல்வன் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

நானும் தமிழ்நாடு அரசும் உங்கள் பக்கத்திலேயே எப்பொழுதும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம். உங்கள் கடின உழைப்புக்கு முழு வெற்றி கிடைக்க என் மனமார்ந்த வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் – அலுவலர்கள் அனைவரும்

# பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்றுவீர்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்!

சேலம், மார்ச் 4 –

கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேலம், அஸ்தம்பட்டி ஆய்வு மாளிகையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி முன்னிலையில் 01.03.2025 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குபின் சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது: –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஊரகப் பகுதிகளுக்கு பல்வேறு திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் பொதுமக்களின் தேவைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இத்திட்டங்கள் பொதுமக்களுக்கு முழுமையாகவும், விரைவாகவும் கொண்டு சேர்த்திட மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்றைய தினம் நடத்தப்படுகிறது.

குறிப்பாக கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அலுவலர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. சீரான குடிநீர் வழங்கப்படுவதை அரசு அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து உறுதி செய்வதுடன் எதிர்கால குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடிநீர் தேவைகள் முழுமையாக பொதுமக்களுக்கு கிடைக்க செய்வதை உறுதி செய்யும் வகையில் இனிவரும் நாட்களில் தொடர்ச்சியாக கள ஆய்வு பணிகள் மற்றும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் சத்துணவு திட்டங்களில் சத்துணவு செயல்பாடுகள் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத் வகையில் தனி கவனம் செலுத்தி தொடர்புடைய அலுவலர்கள் பள்ளிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளவும், ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள பள்ளிக் கூடங்களில் பழுதுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு தேவைக்கேற்ப புதிய வகுப்பறை கட்டடங்களை கட்டி வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் தெருக்களில் குப்பைகள் சேராத வகையில் தூய்மைப் பணியாளர்கள் தினமும் அகற்றப்படுவதை உறுதி செய்வதுடன் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்திடவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த முன்மொழிவுகளை அனுப்பி நிர்வாக அனுமதியை உடனுக்குடன் பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த 4 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், நபார்டு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணிகள் குறித்தும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு வருவது குறித்தும், ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் சீரமைக்கும் பணிகள் குறித்தும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீடுகள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டுள்ள வீடுகள் குறித்தும், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் புதிய வகுப்பறைக் கட்டடப் பணிகள் போன்ற திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அனைத்து கிராமங்களும் சமூக பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடர்புடைய அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு பணிகளை குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் முடித்திட அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி. நே.பொன்மணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், செயற்பொறியாளர் மாது, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சங்கமித்திரை உள்ளிட்ட அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் தாணிக்கோட்டகம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்ட தொழிலதிபர் முரசொலி சிங்காரம் தனது சொந்த நிதியில் ஒரு லட்சம் ரூபாய் பள்ளி வளர்ச்சி நிதிக்கு வழங்கினார். உடன் வட்டார கல்வி அலுவலர் கை.ராஜமாணிக்கம், பள்ளி தலைமை ஆசிரியை க.வீரகேசரி, ஆசிரியை பா.அரசி ஆகியோர் உள்ளனர்.